*News and Articles in Tamil and English Please send them to:*

**THE EDITOR,**

The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

# THE MORNING STAR

Registered as a Nespaper at the General Post Office, Sri Lanka

Under No.Q / J / 104 / News / 89

*Established : 1841 : A Christian Weekly - Published Every Friday*

Vol 156 Jaffna. Friday, 12 May 1995 No. 19

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subscription
Island : Rs.100/-

*For Advertisements*

*Apply to:*

**THE MANAGER**

The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

## Jaffna Christian Union

The Jaffna Christian Union now in its 88th year held its Annual General Meeting at 9.30 a.m. on Saturday the 22nd of April, 1995 at the Jaffna YMCA. The meeting was chaired by the President of the JCU Dr. T. W. Jeyakularajah. The meeting started with devotions led by Sevak Sam Alfred and Rev. S. Nesakumar and the lesson was read by Captain Kohila of the Salvation Army. The minutes of the Annual General Meeting and the annual report of the Union were read by the General Secretary Rev. S. S. Karunairaj and Mr. K. C. Kadirgamar the Asst. Secretary respectively. The accounts were tabled by the treasurer Mr A. Rajasingham.

In the programme of work of the Union the combined services held once a month in the evenings in the different churches in Jaffna Town were highlighted. This effort has been found to be very fruitful and well attended. A script competition for Christian Drama too has been worked out. The Annual Convention is being planned.

The Rev. G. D. Anandarajan was appointed convener of a committee which will organize the Conventions in August. The Union also donates a prize in memory of the Rev. Dr. D.T. Niles. for Religions at the Christian Theological Seminary, Chunnakam at its Diploma Awarding Excercises.

One significant service the J. C. U. has rendered in recent years is the scholarship programme for university students at the Jaffna University. Last year thirteen students received monthly scholarships of Rs. 500.00 each or Rs. 6,000/- per year.

The new office-bearers will be elected at the next meeting of the Executive Committee which is composed of 24 members structured as follows: The Three Heads of Churches, JDC SI, Anglican and Methodist, the Salvation Army Officer, Sevak Christe Seva Ashram and the Chaplain of the Jaffna University as Ex-Officios; 5 elected representatives from the three Churches & three members nominated by the Executive Committee.

The meeting came to a close by the Benediction pronounced by Bishop Ambalavanar.

## Bishops of Church of South India–CCA General Assembly

The Most Rev. Vasanth D Dandin, Moderator of the Church of South India, Rt. Rev. Dr. P. Paul Raj, Deputy Moderator and Prof. George Koshy the Secretary of the Synod will attend the General Assembly of the Christian Conference of Asia which will take place in Colombo in June 1995. Mrs. V. P. Sugandhar, the wife of the Bishop of Medak Diocese too will attend the seminar as an Official Delegate. She will be accompanied by Rt. Rev. B. P. Sugandhar, the Bishop of Medak Diocese.

## Wins Gold Medals

Miss. Rajitha Kantharatnam of Uduvil Girls' College has won two Gold Medals for securing first places at the English Oratorical Contests of both the Jaffna Rotary Club and the Jaffna Lions Club, held recently.

She has also won first places at the English Elocution and English Essay Contests conducted by the Department of Education at the District Level and has brought honour to her College. Ranjitha, well done!

Rajitha is the daughter of Mrs. E. R. Kantharatnam of the staff of Uduvil Girls' College and the late Mr. A. Kantharatnam.

## Schools re-opened

Schools in Jaffna re-opened on Tuesday the 26th April. Schools in other parts of the Island however will re-open on the 2nd of May.

## Remembering the Poet: Rabindranath Tagore



Tuesday the 9th May is observed as Rabindranath Tagore's Day in India. He was born in 1861 to well-accomplished and cultured family in Bengal. Both the Poet's father Thevendranath and Dwarakanath his grandfather were leading members of the Brahmo Samaj founded by Rajaram Mohan Roy. This sect propagated Theism and was strongly opposed to idolatry and ritualism practiced by the majority of Hindus. Tagore was opposed to British rule in India, but at the same time he was strongly critical of this servile and cringing attitude of many Indian Politicians of the time. He exhorted them to turn their zeal into channels of educational and social reform that lay well within their power. In 1901 he founded Santiniketan, the world famous school to provide an environment where the mind of the young "might expand into love of beauty and of God." Tagore's literary achievement is prodigious, it overshadows everything else. In 1913 Tagore was awarded noble prize for Literature. Gitanjali brought him laurels. The inspiration of Gitanjali is clear and unsullied. It is the authentic voice of one who through much suffering had attained j yous serenity. According to Maeterlinck some pages in it are among the loftiest most profound and most divinely human ever written.

## Sofisticated equipment not the prime need of Jaffna Civil Hospital

Dr. C. S. Nachchinakiniyan who spoke on Medical Technology at the Annual Sessions of the Jaffna Science Association said that sofisticated equipments were not the prime need of Jaffna Civil Hospital. He said equipment worth Rs. 20 million are now idling in Jaffna Civil Hospital due to lack of spare parts and technical skill. He said, a sum of four million rupees would be sufficient to give the proper tonic to our pregnant mothers. He said, now almost all the pregnant mothers in Jaffna are anaemic. He said, that the Technicians in Jaffna Civil Hospital have left the country and it was extremely difficult to get spare parts for the modern equipments. The problem was not appropriate technology but appropriate technicians, he said.

The Jaffna Science Association conducted its Annual Sessions on the 27th, 28th & 29th of April, in the Physics Lecture Hall of the University of Jaffna. The Sessions were presided over by Prof. S. Maheswaran, the President of the Association. Research Papers were presented by the eminent Engineers, Scientists, Doctors and Scholars of Jaffna. Our Bishop the Rt. Rev. Dr. S. Jebanesan gave the inaugural address. Prof. V. Navaratnarajah, the President elect of the Association proposed the vote of thanks.

## Memorial Service

**Mrs Joyce Rasamalar Mills**

A Service to thank God for the life and witness of Mrs Joyce Rasamalar Mills was held at CSI Church, Manipay on Wednesday the 10th May at 4.00 p.m. Mrs. Mills died in Colombo on Friday 28th April She was the wife of Mr.C.T.E Mills of Manipay and mother of Vasanthy, Kulan, Pathman, Ranjo and Bo.

# வாழும் எழுத்துக்கள்



கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் எழுதியது

## குறளோவியம்

நீலவானும் நெடுந்திரைக் கடலும் இரண்டறக் கலந்து ஒன்றாகி விட்டனவோ? வான் நிறமும் கடல் வண்ணமும் இருளைத் தோற்கடிக்கும் கரு வண்ணம் கொண்ட கொடுமை தான் என்னே! வான் வீசுகின்ற மழைச் சரங்களை கடலின் அலைகள் எத்துணை உயரம் எழும்பி எதிர் கொண்டு தாக்குகின்றன! புயலா? சூறாவளியா? தென்னை மரங்களும் பனைமரங்களும் தெருவில் கிளம்பும் தூசிகளைப் போல் பறக்கின்றனவே! ஆலமரங்களைப் பூச் செண்டுகளைப் போலக் காற்றின் கரங்கள் எத்தணை கல் தொலைவு தூக்கி எறிகின்றன. அடடா! அதோ அழகு நகரங்களின் மணிமாடங்கள் கூடங்கள் எல்லாமே அழிகின்றன.

இவ்வளவு பெரிய அழிவா? என்று நிலமகள் ஆச்சரியத்துடன் வாயைப் பிளக்கின்றாள். அவளது அகண்ட வாய்ழகுள்ளே நாடுகளும், காடுகளும் விழுகின்றன. வலி தாங்க முடியாது துடிக்கின்றாள் அந்தத் துடிப்பில் வையகமே துடிக்கிறது. அதுதான் பூகம்பம்! பூகம்பம்; தான் உண்டது செரிக்க ஏப்பம் விடுகிறது! அது எரிமலையாக குமுறுகிறது 'நான் எரிப்பேன்' என்று நெருப்புக் குழம்பை ஆறுகளாக பெருக விடும் எரிமலைகளும் - 'நான் அணைப்பேன்' என்று பொங்கி கொதித்து வரும் கடல் அலைகளும் ஒரே காரியத்தைத்தான் செய்கின்றன!

இயற்கையில் இந்தப் பயங்கரக் கூத்து அன்றாடம் இல்லாவிட்டாலும் எப்போதாவது நடைபெறத்தான் செய்கிறது. ஊர்கள் அழிக்கப்படலாம் நாடுகள் நாசமுறலாம் - ஏன்; உலகமே கடலால் பந்தாடப்பட்டு கடும் புயல் சூறாவளியால் கசக்கி எறியப்பட்டு - நிலநடுக்கங்களால் நிலை குலைந்திட்டு - அழிவு சூழ் அலங்கோல உருண்டையாக எரிந்துகொண்டிருக்கலாம்! அந்த அழிவைத்தான் ஊழி என்றார் முன்னோர்.

அத்தகைய ஊழி போன்ற துன்பங்கள் தொல்லைகள் துயரங்கள் மனிதனைத் துரத்துவதுண்டு, அப்படித் துரத்தும் போது அசையாமல் ஆடாமல் நிலை குலையாமல், நெஞ்சம் பதறாமல் கைபிசையாமல், கலங்கி அழாமல், எந்த வேறுபாடுகள் ஏற்படினும், தான் எக்காரணம் கொண்டும் வேறுபடாமல் இருபவனை வள்ளுவர் எவ்வாறு புழுகிறார் தெரியுமா?

அந்தச் செயலை வீரமன்றோ துணிவு என்றோ
பாராட்டி அத்துடன் முடித்து விட வில்லை அவர்!

சிறு துன்பங்களையே தாங்கமுடியாமல் வேறுபட்டு போய் விடும் கோழை மனிதர்களின் மேலுள்ள கோபத்தை; மிகப்பெரும் துன்பங்களைத் தாங்கிக் கொண்டு வேறுபடாமல் உறுதியாக நிற்கின்ற கொள்கையுடையவர்களை மனந்திறந்து போற்றுவதன் மூலம் தீர்த்துக் கொள்கிறார்! அது எவ்வாறு அதை ஒரு பண்பு என்றே சிறப்பிக்கிறார். அதுவும் எத்தகைய பண்பாம்? பண்புக் கடலாம்!

'ஊழியக்காலத்து மாற்றங்களே நேர்ந்த போதிலும் கூடி ஒருவர் - தாம் கொண்ட கொள்கையில் மாற்றமில்லது அந்த துன்பங்களை எதிர்கொண்டு உறுதியாக நின்றால் அவர் பண்பெனும் கடல் எனப் புகழப்படுபவராவர்.' அந்தக் கருத்தை உள்ளடக்கியதே இந்தக் குறள்!

ஊழி பெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படுவார்.

### மூன்று வயதுப் பிரிவிலும் உடுவில் மகளிர் கல்லூரிக்கு முதலிடம்

யாழ்ப்பாணம் பாடசாலை விளையாட்டுக் குழுவினரால் பாடசாலைகளுக்கிடையிலான உடற் பயிற்சிப் போட்டிகளில் பெண்களுக்கான மூன்று வயதுப் பிரிவு உடற்பயிற்சிப் போட்டிகளில் உடுவில் மகளிர் கல்லூரி அணியினர் முதலாம் இடத்தைப் பெற்றதுடன் 1995-ம் ஆண்டில் ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெற்ற பாடசாலை அணிக்கான 'கேணல் கிட்டு ஞாபகார்த்த வெற்றிக்கேடயத்'தையும் பெற்றுக்கொண்டது.

### நாடக பயிற்சி நெறி

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் 'யூனிசெப்' நிறுவனத்தின் உதவியுடன் நான்கு நாட்களுக்கான நாடகப்பயிற்சிக் கருத்தரங்கை யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் நடாத்தி வருகின்றது. இப் பயிற்சிக் கருத்தரங்கில் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற எல்லைகுள் நடைபெறும் பாலர் பாடசாலைகளில் பணி புரியும் பாலர் பாடசாலை ஆசிரியையர் பெருமளவில் கலந்துகொள்கிறார்கள்'

## செய்திச் சிதறல்

### கல்விப்பணிப்பாளர் நியமனம்

யாழ்ப்பாணம் கல்வி வலயம் ஒன்றின் பணிப்பாளராக பணி புரிந்து பதவி உயர்வு பெற்று செல்வி தி. பெரியதம்பியின் இடத்துக்கு கல்விவலயம் இரண்டின் பிரதிக்கல்வி பணிப்பாளராக கடமையாற்றி வந்த திரு இ சிவானந்தம யாழ் கல்வி வலயம் ஒன்றின் புதிய கல்விப்பணிப்பாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

### தையல் பயிற்சி நிலையம்

யாழ்ப்பாணம் வை. எம் சி ஏ ஸ்தாபணத்தில் அரியாலை மேற்கில் நடாத்தப்பட்டு வந்து தையல் பயிற்சி நிலையம் யாழ்ப்பாணம் வை எம். சி ஏ. ஸ்தாபணத்தில் மேல் வீட்டிலிருக்கும் அறையொன்றுக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

இலவச பயிற்சி அளிக்கப்படும் இந்தத் தையல் பயிற்சி நிலையத்தில் பயிற்சிக்கு பெண்பிள்ளைகள் சேர்த்துக் கொள்ளபடவிருக்கிறார்கள்.

### கலையரங்கு திறப்பு

அராலித் திருச்சபையில் திரு. திருமதி இரத்தி செல்லப்பாவின் ஞாபகார்த்தமாக ஓர் திறந்த கலை அரங்கு கட்டி முடிக்கப்பட்டு 27 4. 95 அன்று மாலை 5. 30 மணிக்கு பேராயர் அறிவர் S. ஜெபநேசனால் திறந்து வைக்கப் பட்டது.

இவ் விழாவை பேராயர் S. ஜெபநேசன் செபம் செய்து கலை அரங்கையும் பெயர் பலகையையும் திறந்து வைத்தார். பின்னர் திரு. திருமதி இரத்தி செல்லப்பாவின் ஞாபகார்த்தமாக இரண்டு மலை வேம்புகளை சிறப்பு விருந்தினர் பேராயர் டி. ஜே. அம்பலவாணரும் சேகர ஊழியன் அருட்திரு A.A. போலும் நட்டார்கள். அதை தொடர்ந்து கலை அரங்கில் ஓர் சிறப்புக் கூட்டம் சேகரக் குழுவின் தலைமையில் நடைபெற்றது

இக் கூட்டத்தில் திரு. திருமதி இரத்தி செல்லப்பாவின் குடும்பத்தினரின் இனிய பாடலுடன் சபை ஊழியன் D. S. மதியாபரணத்தின் ஜெபத்துடன் ஆரம்பமாகியது இக் கூட்டத்தில் பேராயர்கள் அம்பலவாணர், ஜெபநேசன் ஆகியோர்கள் சிறப்புரை வழங்கினார்கள் திரு. சத்தியநாதன் நன்றியுரை தெரிவித்தார் அதைத் தொடர்ந்து சபை வாலிபப்பிள்ளைகளின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

### செந்தமிழ் வசிகர கலாநிதி

சென்ற மாதம் மானிப்பாயில் நடைபெற்ற வசந்த நவராத்திரி விழாக்காலத்தில் தொடர்ந்து பத்து நாட்கள் 'தெய்வீக பேருரை' ஆற்றிய யாழ்ப்பாணக் கல்லூரி பொருளியல் ஆசிரியரான அ.குமாரவேல் அவர்களுக்கு யாழ்பல்கலைக்கழக அரசியற் துறை பேராசிரியர் சண்முகநாதன் அவர்கள் 'செந்தமிழ் வசிகர கலாநிதி பட்டத்தை வழங்கி கௌரவித்தார்.

### யாழ். வைமன் கழக புதுவருட நிர்வாகிகள்

யாழ்ப்பாணம் வைமன் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் வைய்மன வைத்திய கலாநிதி ரி. டபிள்யூ. ஜெயகுலராசா தலைமையில் நடைபெற்றது. செயலாளர் வைமன் என். ஜீவானந்தம் அவர்களால் வருடாந்தக் கூட்ட அறிக்கையும், ஆண்டறிக்கையும் சபையில் சமர்ப்பிக்கப்பட்டன பொருளாளர் வைய்மன் பி. எஸ். அருள்ராஜ் அவர்களால் வருடாந்தக் கணக்கறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

புதிய வருட நிர்வாகிகளாக, தலைவர் வைய்மன் வைத்திய கலாநிதி சுறாஸ் சோமசுந்தரமும், செயலாளராக வைமன் எஸ் ஜே. ஞான பொன்ராசாவும், பொருளாளராக வைய்மன் பி. எஸ் அருள்ராசாவும், அடுத்தாண்டுத் தலைவராக வைய்மன் எஸ் தனபாலனும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர். வருடாந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட எல்லோரும் மதிய விருந்திலும் கலந்துகொண்டனர்.

நீதி ஜனத்தை உயர்த்தும் பாவமோ
எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி.

# உதயதாரகை

ஆதீன காரியாலயம், வட்டுக்கோட்டை
Estd. 1841

மலர்: 156 12-05-1995 இதழ்: 19

## திருப்பணி விடையாளரின் கடமை

இம்மாதம் பத்தாம் நாள், யாழ். ஆதீனத்தைச் சேர்ந்த நான்கு சபை ஊழியர்கள் - உதவிக்குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டனர். சில ஆண்டுகளுக்கு முன்னர், நமது ஆதீனத்தில் போதிய குருமார் இல்லையென்ற குறை - சுன்னாகம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியினால் பெருமளவு நிறைவுசெய்யப்பட்டு வருவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

இன்றைய சூழ்நிலையில் நமது திருப்பணிவிடையாளரின் கடமை பேரிது! குருத்துவப்பணி சபையாருக்கு ஆற்றப்படும் மெய்ப்புப்பணியென்றும், 'சமயச் சடங்குகளுக்குத தலைமை வகித்து நடத்தும் பூசாரிப்பணியென்றும் நெடுங்காலமாகக் கருதப்பட்டுவந்தது - இன்றும், பெரும்பாலான சபைகள் இவ்வாறே கருதிவருகின்றன. இது சரியல்ல - இன்று திருச்சபையின் திருப்பணி பல துறைகளில் விரிவடைந்துள்ளது.

ஆதலால், மக்களின் ஆன்மீக நலன்களில் மட்டும் கரிசனை காட்டுவதையே முக்கியமானதாகக் கருதாமல், அன்னாரின் வாழ்க்கை நலன்கள் அனைத்திலும் உண்மையாக அக்கறை கொண்டு பணியாற்றவேண்டியது இன்றைய திருப்பணியாளரின் கடமை. குருத்துவப் பணியின் பொறுப்பை ஏற்றுள்ள ஓர் ஊழியன் - தனது சபையின் குறுகிய வட்டத்தில் மட்டுமே பணியாற்றுவது தனது கடமையென எண்ணி, சபைக்கப்பாலுள்ள கிறித்தவரல்லாத மக்களின் ஆன்மீக - சமூக நலன்களில் அக்கறையற்றிருப்பது - அவர் பெற்றுள்ள தெய்வ அழைப்பிற்கு முரணானது என்பதை அறிக.

குருத்துவப் பணியில் ஈடுபட்டிருக்கும் திருப்பணியாளர்கள் - தமது சபைப் பணிகளுடன் சமூக நலப்பணிகளிலும் ஈடுபடவேண்டும். இதுவே முழுமையான திருப்பணி (குருத்துவப்பணி), சமுதாய மாற்றத்திற்குத் தூண்டுகோலாவும் துணையாகவும் மக்களை வழி நடத்த உதவும் பணி

இவ்விரு பணிகளையும் - (சமயப்பணி, சமூகப்பணி) - வெவ்வேறாகப் பிரித்துச் சில சபைகள் தாம் விரும்பிய பகுதியை மட்டும் நாடுகின்றன. இது தவறான கொள்கை. திருச்சபையின் நாயகராகிய இயேசு பெருமானின் போதனைக்கு மாறானது குருத்துவப் பணியாளர் - மேற்குறித்த இவ்விரு பணிகளும், வேத அடிப்படையில் எழுந்த ஒரே பணி - இதனையே இயேசு பிரான் நடைமுறைப்படுத்தினார் என அறிந்துணர்வது அவசியம். குருத்துவப்பணி மனித வாழ்வு முழுவதையும் சார்ந்தது இறை பணியாகும்.

இதனைத் தொடர்ந்து, நாம் அடுத்ததாக கவனிக்க வேண்டியது - 'விசுவாசிகள் அனைவரும் குருத்துவர்கள்' (Priesthood of all believers) என்ற கொள்கையின் விளக்கமே

> 'கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையின் பொது வாழ்க்கை வளர்ச்சி அடைவதற்காக, கடவுளுக்குரிய மக்களைத் திருப்பணிக்கென்று பக்குவப்படுத்தும் பொருட்டுத் திருப்பணி விடையாளரை திருச்சபைக்கு தந்தருளினார்.' எபே 4: 11, 12

பவுலடியார் கூறிய இவ்வசனம், திருப்பணிவிடையாளரின் நோக்கத்தை தெளிவாகக் காட்டுகிறது. அதாவது திருப்பணிவிடையாளரின் (குருத்துவ ஊழியன்) தலையாய கடமை சபையாரை (இறைமக்களை) இவ்வுலகில் குருத்துவ பணியாளராகப் பணியாற்றப் பயிற்றுவிப்பதேயாகும்.

இன்றைய சூழ்நிலையில். நமது குருமார், இந்த உண்மையை அறிந்துணர வேண்டியது அவசியம். தமது சபைகளிலுள்ள சபையார் இத்துறையில் விருப்புணர்ச்சி அடைந்து இறைவன் தம்மை அழைத்ததின் நோக்கத்தை தெளிவாக உணரச் செய்தல் வேண்டும். - சபையார் தத்தம் பணிக்களங்களில் வாழும், ஏனைய மக்களுக்குத் 'தாம் இறைவனின் உடன் ஊழியர்' I கொரி 3 : 9 என்ற மனப்பான்மையோடு செயல் பட வழி நடத்தப்பட வேண்டும்

அப்பொழுது தான், திருச்சபை உயிர்ப்புடன் வளர்ச்சியடையும் சீர்குலைந்த நமது சமுதாயம் புதியசமுதாயமாக உருவாகும். நமதுகுருமார் தத்தம் சபைகளில் மட்டும் பணியாற்றுவதில் திருப்தி கொள்ளாது, மற்றக் குருமாருடனும் சேர்ந்து கூட்டுப்பணியில் ஈடுபடவேண்டும். அப்பொழுது தான் திருப்பணியின் விளைவுகள் தமிழ்ப் பகுதிகளில் செறிந்த நற்பயனை அளிக்கும். இயேசு பெருமானின் நாமம் மகிமைப்படும்.

> 'இனிவரும் நாட்களில் நமது கடன்
> வெகு அதிகம் விசுவாசிகளே;
> நம்மிடை உள்ள ஐக்கியமே
> வெற்றியும் தோல்வியும் ஆக்கிடுமே'

## உங்கள் ஆரோக்கிய வாழ்வுக்கு

- ✠ பாகற்காயை அடிக்கடி உணவுடன் சேர்த்துச் சாப்பிட்டு வந்தால் கணையம் வலுப்பெறும் இன்சுலின் அதிகமாகச் சுரக்கும்.
- ✠ தூதுவளைக் கீரையை அடிக்கடி உணவில் சேர்த்து வர நுரையீரல் சம்பந்தமான நோய்கள் அகலும்.
- ✠ நீரழிவு நோய் உள்ளவர்கள் கோவைகாயை உணவில் சேர்த்துச் சாப்பிட்டு வர நீரழிவு கட்டுப்பாட்டில் வரும்.
- ✠ அறுகம்புல் சாறு அடிக்கடி பருகிவந்தால் உடலிலுள்ள இரத்தம் சுத்தமாகும் உடலும் பலம் பெறும்.
- ✠ முடக்கத்தான் கீரையை சூப் வைத்துச் சாப்பிட்டுவந்தால் மூட்டு வலிகள் நீங்கும்.

## திருவும் அருட்திருவும்



அருட்திரு:- ஓய்வு நாட்களில் நீங்கள் எவ்வளவு நேரம் தூங்குவீர்கள்?
திரு:- அதுவா? உங்கள் பிரசங்கத்தைப் பொறுத்தது.

மணிமாறன்

## நெடுந்தீவு ஆலயத்தின் 75வது ஆண்டு விழா

20. 3. 95ம் மாலை 4. 30 மணியளவில் இவ்விழாவானது ஆரம்பமானது. ஆரம்ப நிகழ்ச்சியாக புதிதாக கட்டப்பட்ட ஆலயத்தின் Wesely room சபை ஊழியனான வண. J ஞானப்பிரகாசம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நன்றி செலுத்தும் நற் கருணை ஆராதனை சபை ஊழியனால் நடத்தப்பட்டது. இவ்வாரதனையில் பெருந்திரளான மக்கள் சமூகமளித்தனர், அதனைத் தொடர்ந்து 1920ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை இச்சபையில் பணிபுரிந்த ஊழியர்களின் பெயர் பலகையை திவகப் பங்குத் தந்தை வண. A C கிறிஸ்தோபர் அடிகள் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து சபையின் ஓய்வு நாட் பாடசாலைப் பிள்ளைகளின் சபைப் பெரியோர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன இவ்விழாவானது நள்ளிரவு 12மணிக்கு சபையின் செயலாளரான திரு. E. அருந்தவசிலன் அவர்களின் நன்றியுரையுடனும் சபை ஊழியனின் ஆசிர்வாதத்துடனும் முடிவுற்றது இப்பொதுக்கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் குழுமியிருந்தனர்.

## தடகள விளையாட்டுப் போட்டியில் அரியாலைக்கு முதலிடம்

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் அதிக புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது.

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் பிரதேச செயலாளர் திருமதி க. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்ற போட்டியில் அரியாலை காந்தி விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

# The Morning Star

Diocesan Office, Vaddukoddai 12 . 05. 1995


## EDITORIAL

## Jesus, the Way, the Truth and the Life

Jesus said, 'I am the way, and the truth and the life; no one comes to the Father, but by me' Jn 14:6.

Without the Way there is no Going.
Without the Truth there is no Knowing,
Without the Life there is no Growing

By Jesus saying, that He is the way, the truth and the life, He claims Himself to be the Triune God. This therefore, should be the basis for the mission of the Church.

Jesus as the son is the way to His Father - He is the only way to God the Father. Today, we find people claiming that there are many ways, and Christ is one of such ways. The destination of all rivers is the same ocean they claim. But they all do not meet at the same point. If someone wants to bathe in River Ganga, the surest way is not jumping into Mahaweli River, but taking a plane which can take us to Ganga.

Only Jesus died for us, and it is only through his blood our sins are cleansed. Only the righteous can see God But no one is righteous. We are all made righteous because of Jesus Christ. He tore the veil which separated us from God by his death so only through Jesus can we all go to the Father. He is the only way.

Thiruvalluvar said 'Mei Porul Kanbathu Arivu - Seeking the Truth is knowledge' The Proverbs says, the fear of the Lord is the beginning of Wisdom (knowledge). In order to fear, one must seek God. God is the ultimate Truth. One must therefore seek God. But where can we find God? When one seeks God, God draws near that person. God the Father, the ultimate reality, visited this world in Jesus Christ and reconciled to us on the cross, even when we were rebelling against him by sinning.

God the Father, the ultimate reality, entered this world, lived amongst us, redeemed us and has given us new life so that we could live with him eternally.

The Holy Spirit is the life giving Spirit. But Jesus is the True Life. The Holy Spirit, the Spirit of God is also the Spirit of Christ. Christ therefore, is very active in this world through the Holy Spirit. He gives life to the lifeless, and the dying. He gives power to the powerless. He lifts up the downtrodden and gives the glory to the dehumanized and makes them children of God.

Jesus as Son is the way to the Father who is the ultimate reality but all the way long we see Christ. When we see Christ, we see the Father and when we see the Father, we see Christ, because, Jesus and the Father are the same. They cannot be separated. Then the Spirit of Christ (or Father) proceeds out of them. Both the Father and Son visit us in the Holy Spirit. So Jesus is Sat Chit Anantha. As Sat he is the ultimate reality, the unmoveable God. As Chit, he is the departing God or the one who takes us to God. and as Anantha, he is the visiting God, one who visits us and gives us life.

Today people are perplexed. Many are the questions in their minds: What is the meaning of life? What is the truth? When will all our tribulations end? To such, Jesus is the way, the Truth (ultimate reality) and the Life. The Church should therefore, be involved in the mission work, whereby it can bring all people to Christ the Sat Chit Anantha.

### Clergy Transfer

Mr S J. Manickam who is now serving as Asst Librarian at Christian Theological Seminary, Maruthanamadam has been assigned duties as Worker-in-charge,Chankanai. He will assume work as from the 14 th of May 1995

### Obituary

#### Mr. David Subramaniam

We are sorry to record the death of Mr. David Subramaniam of Kalmadukkulam which occurred under tragic circumstances on the 28th April 1995. Mr. David Subramaniam was an active member of the Kalmadukkulam CSI Church. He was confirmed as a full member of the Jaffna Diocese of the Church of South India by our Bishop in December 1994.

We are sorry to record the death of Mrs. Emily Mangayatkarasi Sivaguru of Punnalaikkadduvan which took place on Tuesday the 25th April. She was the wife of Mr. Thamotharampillai Sivaguru, daughter of late Solomon Selvadurai, Catechist, SIUC and mother of Arudselvan, Arulmalar (Warden, Child Care Centre, Atchelu)Thevaranjan & Selvaranjan.The funeral took place at her residence at Punnalaikkaduvan on Wednesday the 26th April. The remains were then removed to Puttur Methodist cemetery for interment.

### Chellappah Ponnudurai in Malaysia

Death occurred in Malaysia of Chellappah Ponnudurai on 16. 3. 95. Late Mr. Ponnudurai left for Malaysia at the age of 9. Soon after his arrival in Malaysia, he heard the death of his mother Srimathi Chinnachchipillai at Mc Leod Hospital, Inuvil. He returned to Jaffna in 1977, at the age of 60, renovated two rooms at Mc Leod Hospital at a cost of Rs 10,000/- and made an endowment of Rs 15,000/ in his mother's name for free treatment. This fund is named Srimathi Chinnachchipillai Chellappah Memorial Fund.

We extend our deepest sympathies to his bereaved family.

### Archbishop Desmond Tutu to Retire

The world renowned Archbishop of South Africa Desmond Tutu has announced his retirement early next year on reaching his 65th year. He was consecrated Bishop of Cape Town thirty - five years ago. He worked tirelessly for the emancipation of his down-trodden people and has lived to see his dreams come true. It was reported on the day of the elections last year that the good archbishop pinched himself to believe that it was all true! He has accepted an academic assignment in one of the American universities next year. The BBC announcement did not name the university concerned.

### Evelyn Ratnam Institute Souvenir

Dr. N. Subramania Iyer of the Tamil Dept. of the University of Jaffna submitted a paper at a seminar at Evelyn Ratnam Institute on Tuesday the 9th May. The subject of his paper was the different traditions of introducing new books in history of Tamil Literature (Arangetta Marapu). Mr. S. Sivalingarajah, the Director of the Institute proposed a vote of thanks. A lively discussion followed the address of Dr. Subramania Iyer

### Book Release

Catholic revival in post-colonial Sri Lanka written by Rev Fr. A J. V. Chandrakanthan, Head, Dept. of Christian Civilization, University of Jaffna was formally released at the Kailasapathy Auditorium in the University Campus. The function was organized by the Catholic Students' Union of the University and the Chief Guest was The Most Rev. Thomas Soundaranayagam, the Roman Catholic Bishop of Jaffna. Reviews of the book were made by Rev Fr. S. J. Emmanuel, Prof. K. Sivathamby, Prof. N. Balakrishnan and other prominent academics of Jaffna. The book " Catholic Revival in Post-Colonial Sri Lanka" a Critique of Ecclesial Contextualization is published by the Social And Economic Development Centre, 133. Kynsey Road, Colombo-8

Registered as a News Paper at the G P. O. Sri Lanka. News Printed for the Jaffna Diocese of the Church of South India at the American Ceylon Mission Press. 182, 1st Cross Street, Jaffna on Friday the 12th of May 1995 and published by Mr. G. Nadaraja, Diocesan office, Vaddukoddai.